



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி செப் 5 ஆம் திகதியில் ஆரம்பிக்க நீதிமன்றின் தீர்மானம்

முல்லைத்தீவு, ஒகஸ்ட் 31

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என நீதிமன்றில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு, முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில், இன்றைய தினம் விசேட அமர்வொன்று இடம்பெற்றிருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் கடந்த 8 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டு அதற்கான திட்டங்கள் 17 ஆம் திகதி தாக்கல் செய்யப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய குறித்த வழக்கு தொடர்பாக வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம், கடந்த 17 ஆம் திகதியன்று தொல்பொருள் திணைக்களத்தினர், சட்டவைத்திய அதிகாரி அடங்கிய குழுவினர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பிரதிநிதிகள், மற்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி தலைமையில் எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையில் முன்னிலையாகியிருந்தனர்.

2 ➤


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 12 வியாழக்கிழமை 31.08.2023 கதிர் 62



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## ரணிலை ஆதரிக்க வடிவேல் தீர்மானம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையானவர். மலையகப் பெருந்தோட்ட மக்களுக்குக் காணி உரிமை வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுத்தால் ஒட்டுமொத்த மலையக மக்களுடன் அவருக்கு ஆதரவு வழங்கத் தயார்!, என்று இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

எனக்குக் கட்சி முக்கியமில்லை. எனது மக்களுக்குச் சேவை செய்யக்கூடியவர்களே முக்கியம், என்றும் அவர் மேலும் கூறினார். (O3)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் நீதிக்காக அமெரிக்கா என்றும் துணை நிற்குமாம்!

### மேரிலான்ட் செனட் சபை உறுப்பினர்



அமெரிக்காவின் மேரிலான்ட் நகர செனட் சபை உறுப்பினரான கிரிஸ் வேன் ஹோலென் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சில குடும்ப உறுப்பினர்களை கிரிஸ் வேன் ஹோலென் சந்தித்துள்ளார்.

இதன்போது, நீதிக்கான போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுடனும், அவர்களது குடும்பத்தினருடனும் அமெரிக்கா என்றும் துணை நிற்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

2 ➤

## நாளை கடும் மழை பெய்யலாம்!

### வளிமண்டலவியல் திணைக்களம்

தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதன் காரணமாக நாடளாவிய ரீதியில் மழையுடனான வானிலையில் நாளை அதிகரிப்பு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ, தென் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்யக்கூடும் எனவும், இது தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடும் என அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையுடன், தற்காலிக பலத்த காற்று

2 ➤

## என் மீது திட்டமிட்டு சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் போலியானவை

### ஜே .வி.பி. தலைவர் அநுரகுமார பதிலடி



தான் மோல்டாவில் நிதி முதலீடு செய்துள்ளதாக முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் போலியானவை, என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், தனக்கு அயர்லாந்தில் வீடு இருப்பதாகக் கூறப்படும்

2 ➤

## ஐக்கியமக்கள் சக்தியிலிருந்து யாரும் ஐ.தே.க.வுக்குப் போக மாட்டார்கள்!

### ஹர்ஷன ராஜகருணா தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது வருடாந்த மாநாட்டில், தமது கட்சியின் உறுப்பினர்கள் எவரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளமாட்டார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் ஆதரவை வழங்குவார்கள், என ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்ந்தும் தெரிவித்துவரும் நிலையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட போது ஹறின் பெர்னாண்டோவும்

2 ➤

## யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சி ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் அமைச்சும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து நாளை முதலாம் திகதி முதல் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை கைத்தொழில் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.

குறித்த கண்காட்சி, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ்பத்திரனவின் தலைமையில் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதன்போது, முதலீடு, வர்த்தக மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தல்களும் வழங்கப்படவுள்ளதாக, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொறியியல்துறை பணிப்பாளர் நிஷாந்த வீரதுங்க தெரிவித்தார். (க)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம் புரிந்தார் பௌத்தபிக்குவிற்கு பத்து வருட சிறைத்தண்டனை

தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒன்பது வயதுடைய சிறுவன் ஒருவனை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றம் நிரூபிக்கப்பட்ட பௌத்த பிக்கு ஒருவருக்கு நேற்று முன்தினம் பலபிட்டிய உயர் நீதிமன்ற நீதிபதி ரங்க திஸாநாயக்கவினால், பாரிய வேலைகளைச் செய்வதற்கான பணிப்பு சகிதம் பத்து வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

வசதி குறைந்த குடும்பமொன்றைச் சேர்ந்த மேற்படி சிறுவன் தரம் ஐந்தில் கல்வி கற்றுவந்ததுடன், 2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பதினாறாம் திகதி யன்று இந்த சிறுவன்மீது குறித்த பிக்கு பல தடவைகள் பாலியல் துஷ்பிரயோகம் புரிந்துள்ளார்.

சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக இருபதாயிரம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் எனவும் அதனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிக ஆறு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

மேலும் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு ரூபாய் இரண்டு லட்சம் நஷ்ட ஈடாக வழங்கவேண்டும் எனவும், அத் தொகை வழங்கப்படாவிட்டால் மேலும் இரண்டு வருட சிறைத்தண்டனையையும் அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் கூறப்பட்டது.

எல்பிட்டிய பொலிஸாரினால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் வழக்குத் தொடுநர் சார்பாக அரச சட்டத்தரணி சௌம்யா விஜேசிங்ஹ முன்னிலையாகியிருந்தார். (ரெ-2)

# இலங்கையில் எரிபொருள் விலைக் கழிவு முதல் சேவையை ஆரம்பித்தது சினோபெக்!




பெட்ரோல் மற்றும் டீசலுக்கு லீற்றருக்கு 3 ரூபாய் விலைக் கழிவுடன் சினோபெக் லங்கா நிறுவனம் உத்தியோகபூர்வ வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி மத்தேகொடவில் உள்ள முதல் எரிபொருள் நிரப்பு நிலையத்தில், எரிபொருள் விநியோகத்தை சினோபெக் லங்கா நிறுவனம் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# தென்னை அபிவிருத்திச் சபையின் கலந்துரையாடலும் தென்னைக் கன்று வழங்கலும் செப்டெம்பர் 2 இல்!

தென்னை அபிவிருத்திச் சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் தேவராசா வைகுந்தன் இன்றைய தினம் ஊடகச் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

எதிர்வரும் செப்டெம்பர் 2 ஆம் திகதி பளை தர்மகனி பகுதியில் தேங்கு அபிவிருத்தி சபையின் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் உள்ள தென்னை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு வகையான விடயங்கள் தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக அவர் அச்சந்திப்பில் தெரிவித்தார்.

இதன்போது, தென்னைச் செய்கையில் ஆர்வம் உடையவர்களுக்கான ஒரு ஏக்கர் தென்னைப் பயிர் செய்வதற்கான மானிய அடிப்படையிலான தென்னைக் கன்றுகளும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்பொழுது வட மாகாணத்தில் தென்னைச் செய்கையில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டுள்ளதாகவும், அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு பகுதிகளிலும் தென்னைச் செய்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

அன்றைய தினம் நிகழ்வுக்கு அனைத்துப் பகுதிகளில் இருந்தும் வருவதற்கான பேருந்து ஒழுங்குகள் அப்பிரதேசங்களில் உள்ள கப்புறுக்க சங்கங்களின் ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும், நிகழ்வு காலை 9 மணி அளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனைவரையும் குறித்த நேரத்தில் சமூகமளிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (02)

## ஐக்கியமக்கள் சக்தியிலிருந்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுஷ நாணயக்காரவுமே அவர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டனர் எனவும் அவர் கூறினார்.

மேலும், கடந்த 2020 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் டயானா கமகே, ராஜபக்சக்களுக்கு ஆதரவை வழங்கியதாகவும், ராஜபக்சக்களுடன் இணைந்து கொண்டதன் மூலம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீள முடியாத ஒரு தவறைச் செய்துள்ளார் என்றும் ஹர்ஷன ராஜகருணா சுட்டிக்காட்டினார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஏழு தேசியப் பட்டியல் ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட தமது கட்சியைப் பார்த்து ஐக்கிய தேசியக் கட்சி அஞ்சுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## என் மீது திட்டமிட்டு சுமத்தப்படும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவலும் தவறானது, என்றும் அவர் கூறினார்.

ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தி அரசியல் ரீதியில் இன்று எழுச்சியடைந்துள்ளது. இந்த அரசியல் சக்தியை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ளவர்களே இப்படியான குற்றச்சாட்டுகளை, போலியான தகவல்களை வெளிப்படுத்தி வருகின்றனர். இவை அனைத்தும் போலியானவை.

மோல்டாவில் நிதி உள்ளது எனக் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சிக்கு எமது கட்சி சட்டத்தரணி ஊடாக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தை நாம் சட்ட ரீதியாக அணுகுவோம். அதேபோல், அரசியல் ரீதியில் பதிலடி கொடுக்க வேண்டிய இடங்களும் உள்ளன. அதற்கு அந்தவகையில் பதில் கொடுப்போம்.

நான் மக்களின் ஒரு சதத்தைக்கூட எடுத்து எனது சொந்தச் செலவுகளுக்குப் பயன்படுத்தியது கிடையாது. எம்.பிக்களின் சம்பளம்கூட கட்சி நிதியத்துக்குத்தான் செல்கின்றது.

எமது கட்சியிடம் கறுப்புப் பணம் இல்லை. நேர்மையாக நடந்துகொள்வதால்தான் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கணக்கறிக்கைகளைக்கூட நேர்மையாக வழங்குகின்றோம்!, என்றும் அவர் குறிப்பிட்டார். (01)

## நாளை கடும் மழை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (04, த)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் உறவுகளை எண்ணி கவலையுடனே பயணிக்கின்றனர் என்றும், நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியன கிடைக்கப்பெற வேண்டும் எனவும் கிரிஸ் வேன் ஹோலென் தெரிவித்தார். இது தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவிக்கையில்,

கிரிஸ் வேன் ஹோலென் இலங்கையின் நீண்டகால நண்பர். இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்த உழைத்தவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தானும், கிரிஸ் வேன் ஹோலெனும் இணைந்து இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தவதற்கான வழிகள் தொடர்பில் கலந்தாலோசிப்பதோடு, ஜனநாயக விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கான கூட்டு அர்ப்பணிப்பு தொடர்பிலும் ஆராயவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, கிரிஸ் வேன் ஹோலெனின் தந்தை 1972 முதல் 1976 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்துள்ளமை, இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கான 75 வருடகால கூட்டாண்மையை மேலும் வலுவாக்குகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## கொக்குத்தொடுவாய் மனிதப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, அகழ்வு பணி தொடர்பான பாதீட்டு அறிக்கையினை தொல்பொருள் திணைக்களம் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தது.

அகழ்வு பணிக்காக நிதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப் பெறாத நிலையில் உடனடியாக அகழ்வுப் பணியை மேற்கொள்ள முடியாது இருப்பதாக சட்ட வைத்திய அதிகாரியினால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் பாதீட்டினைத் தாக்கல் செய்து அகழ்வுப் பணியினை மேற்கொள்ள முடியும் என தெரிவித்திருந்தனர்.

இதன்படி, இன்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் அனைத்துத் திணைக்களங்களங்களினதும் சம்மதத்துடன் எதிர்வரும் 5 ஆம் திகதி அகழ்வுப் பணியை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைகளில், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா, யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி எஸ்.பிரணவன், சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, வி.கே.நிரஞ்சன், ரணித்தா ஞானராசா, வி.எஸ்.தனஞ்சயன், காணாமல் போன அலுவலகத்தினுடைய சட்டத்தரணிகளான எஸ்.துஷ்யந்தினி, ஜெ.தர்பரன், முல்லைத்தீவு மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்டச்செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் ம.உமாமகள், கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர், கரைத்துறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் கா.சண்முகதாசன், கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய பொலிஸ்மா அதிபர் சமுத்திரஜீவ, முல்லைத்தீவு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அசோக பெரேரா, கொக்குளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் தடயவியல் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர் முன்னிலையாகியிருந்தனர். (க)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# சமாதான நல்லிணக்க ஊக்குவிப்பு உதவிப் பொதிகள் வழங்கும் நிகழ்வு




(வி.ரி. சகாதேவராஜா)

சமூக அபிவிருத்தி நிறுவனம், காரைதீவு ஸ்பீட் நிறுவனத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் 10 கிராமங்களை உள்ளடக்கியதாக சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஓர் அங்கமாக, காரைதீவு, சம்மாந்துறை, கல்முனை வடக்கு ஆகிய பிரதேசங்களுக்கான உதவிப் பொதிகள் வழங்கும் நிகழ்வு காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில், சமூக அபிவிருத்தி நிறுவன பிராந்திய இணைப்பாளர் எம்.எஸ்.ஜலீல் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவும், கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜனும், சிறப்பதிதிகளாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் எம்.இர்பான், ஸ்பீட் நிறுவனச் செயலாளர் வே.ஜனார்த்தனன், உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான வலையமைப்பு மற்றும் இத் திட்டத்துக்கான ஸ்பீட் நிறுவன இணைப்பாளர் எம்.ஐ.றியால், அதன் அங்கத்தவர்கள், கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

காரைதீவு, கல்முனை வடக்கு, மற்றும் சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட, தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 75 கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

குறிப்பிட்ட கிராம ஒத்துழைப்பு மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்கப்படுத்தும் நோக்குடன் அதற்கான உபகரணங்களும், உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

## கலாநிதி எம்.எச்.எம். அஸ்ரப் நினைவு நிகழ்வு அனைவரையும் கலந்து கொள்ள அழைப்பு

(நூருல் ஹுதா உமர்)

தனது கொள்கைகளை விதையாக வீழ்த்தி முஸ்லிம் அரசியலில் புதிய முகவரி எழுதி தனது அரசியலில் தனித்தன்மையை உறுதிப்படுத்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி பெருந்தலைவர் கலாநிதி எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களின் நினைவு தினமும் துஆ பிராத்தனையும் அடங்கிய தேசிய நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி அவரது தொகுதியான கல்முனையின் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் அறிவித்துள்ளார்.



இந்த நிகழ்வை உயிரோட்டமுள்ளதாக மாற்றியமைக்க தலைவர் அஷ்ரபை நேசிக்கும் உறவுகள் எல்லோரும் பிரதேசங்கள் கடந்து, மாறுபட்ட கட்சிக் கொள்கைகள் துறந்து ஒன்றிணைவோம், என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## அவசர விசேட மருத்துவ நிபுணர்கள் 23 பேரில் 17 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்

இலங்கையிலுள்ள அவசர விசேட மருத்துவ நிபுணர்கள் 23 பேரில் 17 பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் இந்திக்க கருணாதிலக்க ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார். நாட்டில் நிலவுகின்ற அரசியல், சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளே இவ்வாறு இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான ஒரு காரணம் எனவும், மேற்படி விசேட மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதானது ஒருவகையில் நாட்டிலிருந்து அவர்களை விரட்டிவிடும் ஒரு செயலாகவே தான் கருதுவதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

இந்த மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான காரணங்களை சரிவர ஆராய்ந்து அவர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதை தவிர்க்கச் செய்வதற்கான வேலைத்திட்டமொன்றை வகுக்க வேண்டியுள்ள போதிலும் அவ்வாறான வேலைத்திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய அரச தொழிற்துறைகளில் உயர் பதவி வகிப்போருக்கு போதுமான வசதிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மருத்துவத்துறையில் உள்ளோருக்கு வழங்கப்படும் வசதிகள் மிகவும் குறைந்தளவே காணப்படுவதாகவும் அத்துடன், கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றும் விசேட மருத்துவர்கள் தங்குமிடங்களை தேடிக்கொள்வதிலும் பாரிய கஷ்டங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதாகவும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

விசேட மருத்துவர் ஒருவரை உருவாக்குவதற்கு ரூபாய் 160 லட்சம் அளவில் செலவாகுவதாகவும் இத்தகைய மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறுவதானது பாரதூரமான விடயம் எனவும் உரிய அதிகாரிகள் இந்நிலைமை குறித்து கவனம்செலுத்தி உரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் பேராசிரியர் மேலும் தெரிவித்தார். (ரெ-1)



# சிரிய கிளர்ச்சியாளர்களுக்கிடையே மோதல் 18 பேர் பலி - அமெரிக்க ராணுவம் களத்தில்

ஐ.எஸ். அமைப்பினரின் அச்சுறுத்தல் அதிகரித்ததால் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் ஈராக்கை மையமாகக் கொண்ட அமெரிக்க ராணுவத்தினர் சிரியாவிலும் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அங்கு ஐ.எஸ். அமைப்பை எதிர்க்கும் கிளர்ச்சி இயக்கங்களுக்கு ஆயுதங்கள் வழங்கியும், ராணுவ அறிவை பகிர்ந்துகொண்டும் அமெரிக்க ராணுவம் ஆதரவு அளித்து வருகிறது. இதில் அமெரிக்க ராணுவத்தின் உதவியை சிரிய ஜனநாயகப்படை இயக்கமும், அரபு பழங்குடியினரும் அதிக அளவில் பெறுகிறார்கள்.

இருவேறு கொள்கைகளைக் கொண்ட இந்த இரு அமைப்புகளுக்குள்ளும் அவ்வப்போது மோதல் போக்கு நிலவி வந்தது.

இந்த நிலையில், அரபுப் பழங்குடியினருடன் பேச்சுவார்த்தை நடத்த சிரிய ஜனநாயகப்படை நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர். பொதுவான இடத்தில் வைத்து பேச்சுவார்த்தை நடக்க ஏற்பாடானது. சிரியாவின் வடகிழக்கு நகரான ஹசாகேவில் கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் சிரிய ஜனநாயகப்படை சார்பில் அதன் தலைமைத் தளபதி அகமட் கபீல் உள்பட முக்கியமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில், அகமட் கபீல் உள்ளிட்ட நிர்வாகிகளை அரபுப் பழங்குடி அமைப்பினர் கைது செய்து அழைத்து சென்றனர்.



தகவல் அறிந்த சிரிய ஜனநாயகப்படை ஆதரவாளர்கள் நாடு முழுவதும் போராட்டத்தில் குதித்தனர். கண்ணில் படும் அரபுப் பழங்குடியினரை தாக்கி தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால், ஆத்திரமடைந்த அரபு பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள் எதிர்தரப்பினர் மீது சரமாரியாகத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இரு பிரிவினரும் துப்பாக்கிகளைக் கொண்டு கடுமையாகச் சண்டையிட்டு கொண்டதில், 2 அப்பாவி பொதுமக்கள் உள்பட 18 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். 15 க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்திருக்கலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்முறையைக் கட்டுப்படுத்தும் வகையில் 900 க்கும் அதிகமான அமெரிக்க வீரர்கள் கலவரம் வெடிக்க வாய்ப்புள்ள இடங்களில் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (04)




## அமெரிக்க உயிரியல் பூங்காவுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுப்பு!

அமெரிக்காவின் தலைநகரமான வொஷிங்டனில் 163 ஏக்கர் பரப்பளவில் தேசிய உயிரியல் பூங்கா அமைந்துள்ளது. மிகவும் பழமை வாய்ந்த இந்த பூங்காவில் 3,000த்திற்கும் அதிகமான உயிரினங்கள் பராமரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

கிறிஸ்மஸ் தினம் தவிர ஆண்டு முழுவதும் செயல்படும் இந்தப் பூங்காவிற்கு தினந்தோறும் ஏராளமான பொதுமக்கள் வருகை தருகின்ற இந்தப் பூங்காவின் நிர்வாக அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து பூங்கா வளாகம் தற்காலிகமாக மூடப்பட்டது. பார்வையாளர்கள், பூங்கா நிர்வாகிகள் அனைவரும் வெளியேற்றப்பட்டு வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் பூங்காவை அங்குலம் அங்குலமாக சோதனையிட்டனர். ஆனால் வெடிகுண்டோ அல்லது சந்தேகத்துக்குரிய வேறேதும் வெடிபொருளோ கிடைக்கவில்லை.

அதன்பின்னரே இந்த வெடிகுண்டு மிரட்டல் யாரோ திட்டமிட்டு மேற்கொண்ட குழப்ப நடவடிக்கை என தெரிய வந்தது. இதுகுறித்து பொலிசார் வழக்குப்பதிவு செய்து மிரட்டல் விடுத்தவரைத் தேடி வருகின்றனர். (04)

## தமிழகத்தில் முருங்கைக்காய் விலை வீழ்ச்சி கால்நடைகளுக்கு தீவனமாக்கும் அவலநிலை



ஒட்டன்சத்திரம், இடையக்கோட்டை, மார்க்கம்பட்டி, கள்ளிமந்தையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் முருங்கைக்காய் சாகுபடியில் விவசாயிகள் அதிக அளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்கு விளையும் முருங்கைகாய்கள் ஒட்டன்சத்திரம், மார்க்கம்பட்டி சந்தைகளில் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், வெளிமாநிலங்களுக்கும் முருங்கைக்காய்கள் செல்கின்றன. கடந்த சில மாதங்களுக்கு முன்பு முருங்கைக்காய்கள் வரத்து குறைந்தது. இதனால் விலை ஏறுமுகமாக இருந்தது. கிலோ ரூ.100 வரை விற்பனையானது.

இந்த நிலையில் தற்போது சந்தைகளுக்கு முருங்கைக்காய்கள் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. அதன்படி ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.6 முதல் ரூ.7 வரை விற்பனையாகிறது.

பறிப்புக் கூலி, சந்தைக்குக் கொண்டு செல்ல வாகனப் போக்குவரத்துச் செலவுகள் கூட விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. இதனால், முருங்கைக்காய் சாகுபடி செய்த விவசாயிகள் பொருளாதார ரீதியாக முடங்கிப் போயுள்ளனர். மரங்களில் காய்களைப் பறிக்காமலயே அப்படியே சில விவசாயிகள் விட்டுள்ளனர்.

விலை வீழ்ச்சியால் வேதனை அடைந்த சில விவசாயிகள், தங்களது வீடுகளில் வளர்க்கிற ஆடு, மாடுகளுக்கு முருங்கைக்காய்களைத் தீவனமாக்கி விட்டனர். தோட்டங்களில் இருந்து கட்டுக்கட்டாக முருங்கைக்காய்களைப் பறித்து வந்து கால்நடைகளுக்கு கொடுத்து வருகின்றனர்.

முருங்கைக்காய்களுக்கு நிரந்தர விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும், முருங்கைப் பவுடர் உருவாக்கும் தொழிற்சாலையை அமைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அப்போதுதான் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் என்றும் அப்பகுதி முருங்கை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## புலம்பெயர்ந்து வருவோரால் அல்லலுறும் இத்தாலி சர்வதேச உதவிக்கு செஞ்சிலுவை சங்கம் அழைப்பு



வட ஆபிரிக்கா மற்றும் பால்கன் பிரதேசத்தில் இருந்து வரும் புலம்பெயர்வோருக்கு இடமளிக்க முடியாமல் இத்தாலி போராடி வருகின்ற நிலையில், அந்த நாட்டின் செஞ்சிலுவை சங்கம் சர்வேதேச முயற்சிகளுக்கான அழைப்பினையும் விடுத்துள்ளது.

இத்தாலியின் தெற்குப் புறக்காவல் நிலையமான லம்பேடுசா தீவில், வார இறுதியில் 4,200க்கும் அதிகமான குடியேற்றவாசிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக அந்தநாட்டின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, 53,000 பேர் சட்டவிரோதமாக கடல் வழிப் பயணங்களை மேற்கொண்டு இத்தாலிக்கு வருகை தந்துள்ளதாகவும், இதுவரை மொத்தமாக ஒரு இலட்சத்து ஏழாயிரத்து 500 இற்கும் அதிகமானோர் சட்டவிரோதமாக புலம்பெயர்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## உகாண்டாவில் 200 கைதிகளுக்கு பொது மன்னிப்பு- அதிபர் உத்தரவு

ஆபிரிக்க நாடான உகாண்டாவின் அதிபர் யோவேரி முசெவெனி மனிதாபிமான அடிப்படையில் 200 சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிக்க உத்தரவிட்டு உள்ளார்.

நாட்டில் உள்ள சிறைகளில் 72,000 இற்கும் அதிகமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். உடல் நலக்கோளாறு உடைய கைதிகளையும், நன்னடத்தை கொண்டவர்களையும் மனிதாபிமான அடிப்படையில் தேர்ந்தெடுந்து மன்னிப்பு வழங்க அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு அதிபரும் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

அதன்படி 1800 கைதிகளின் பெயர்ப் பட்டியலில் இருந்து 200 பேரைத் தேர்வு செய்து மன்னிப்பு வழங்கப்படவுள்ளது எனறு கைதிகள் நலத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு அதிபர் யோவேரி முசெவெனியின் ஒப்புதலின் பேரில் பொதுமன்னிப்பு கொடுத்து 800 சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சிச் செயல் முன்னணி வலையமைப்புக்களின் போதையொழிப்பு நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

இனங்களுக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்பி இளம் சந்ததியை ஆற்றலும், நல்லொழுக்கமுமிக்க சந்ததியாக உருவாக்கும் நோக்கில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் அதன் அனுசரணை வலையமைப்பான “இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில், முன்னணியின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் யூ.எல்.ஹபீலாவின் ஒருங்கமைப்பில், தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எம்.எஸ். அன்ஸார் மௌலானா தலைமையில் போதையொழிப்புப் பேரணியும், வீதி நாடகமும் நேற்று கல்முனையில் இடம்பெற்றன.

கல்முனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.எப்.எம். பழீல் கல்முனை பிரதேச செயலக முன்றலில் வைத்து போதையொழிப்பு பேரணியை தொடக்கி வைத்தார்.

கல்முனை பிரதான வீதியூடாக சென்ற பேரணி பொதுச்சந்தையை ஊடறுத்து, கல்முனை இஸ்லாமாபாத் வீட்டுத்திட்டத்தை சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து, அக்கரைப்பற்று அருவி கலை மன்றக் கலைஞர்களினால் போதையொழிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் கொடுமை போன்றவற்றுக்கான விழிப்புணர்வை உள்ளடக்கிய கருவைக் கொண்ட வீதி நாடகம் அரங்கேற்றப்பட்டது.

# சம்மாந்துறையில் கல்முனைக் கல்வி மாவட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் நடைபெற்றன



(வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை தமிழ் மொழித்தினத்திற்கான கல்முனைக் கல்வி மாவட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகள் இன்று சம்மாந்துறை அல்-மர் ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, மற்றும் திருக்கோவில் ஆகிய நான்கு கல்வி வலயங்களின் போட்டியாளர்கள் கலந்துகொள்ளும் இந்த மாவட்ட மட்டப் போட்டி நிகழ்வின் துவக்க விழா, சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது .

பிரதம அதிதியாக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் கலந்து சிறப்பித்தார். ஏனைய கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதம அதிதி தேசியக் கொடி ஏற்றியதும், சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

விழாவில், விரைவில் பணி ஓய்வு பெற இருக்கும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியத்தை, வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பாராட்டி, வாழ்த்து மடலும் நினைவுச்சின்னமும் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.



# நேற்று மாலை நல்லூர் ஆலய மஞ்சத்திருவிழா

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவின் பத்தாம் நாள் மஞ்சத் திருவிழா நேற்று மாலை வெகுசிறப்பாக இடம்பெற்றது.

சிற்ப சாஸ்திர ஆகம விதிமுறைப்படி கலையம்சமும் சிற்பங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அழகிய மஞ்சத்தில், முத்துக் குமாரசுவாமியாக முருகப் பெருமான் எழுந்தருளி அருள் பாலித்தார். இந்த அழகிய காட்சியினைக் காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடியிருந்தனர். (O1)

# நல்லூர் வீரமாகாளி ஆலயத்தில் திருட்டு ஆலயக் குருக்கள் பொலிசிஸ் முறையீடு



நல்லூர் வீரமாகாளி ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளதோடு, வசந்த மண்டபத்தில் இருந்த ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டுள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவத்துடன் ஆலயத்தில் நெருங்கிச் செயற்பட்டவர் சம்பந்தப்பட்டமை சிசிரிவி காட்சிகள் மூலம் உறுதியாகிய நிலையில், ஆலயக் குருக்கள் யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். (O1)




# அபார வெற்றியுடன் ஆசியக்கிண்ண தொடரை ஆரம்பித்தது பாகிஸ்தான்!

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேபாள் அணியுடனான முதல் போட்டியில் மிகப்பெரிய வெற்றியை பாகிஸ்தான் அணி பெற்றுக்கொண்டது.

முல்தானில் நேற்று தொடங்கிய ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆடுகளம் பந்து வீச்சுக்கு மெதுவாக இருந்ததால் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களை எடுக்கச் சிரமப்பட்டனர்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த நிலையில், அணித்தலைவர் பாபர் அசாமும் துணைத் தலைவர் ரிஸ்வானும் இணைந்து அணியை மீட்டனர். முதல் பவர்பிளே முடிவில் பாகிஸ்தான், 2 விக்கெட்டுகளை இழந்து 44 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. குறைவேக ஆடுகளத்தில் நேபாள சுழல் பந்துவீச்சாளர்களை அடித்தாடச் சிரமப்பட்ட இருவரும் ஒவ்வொரு ஓட்டங்களாச் சேர்த்தனர்.

44 ரன்கள் எடுத்த ரிஸ்வான் ரன் அவுட்டாக, ஐந்தாவது வீரராகக் களமிறங்கிய அக்ஹா சல்மானும் 5 ஓட்டங்களில் லாமிச்சானேயின் சுழலுக்கு வெளியேற, பாகிஸ்தான் அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது.

அரைச் சதத்தை எட்டியதும் பாபர் அசாம் தனது வேகத்தைக் கூட்டினார். மறுமுனையில் நிதானமாகத் தொடங்கிய இப்திகார் அஹமட், இன்னிங்ஸின் முதல் சிக்ஸரை 35 ஆவது ஓவரில் சொம்பல் கமியின் பந்தில் அடித்தார். 109 பந்துகளில் பாபர் அசாம் சதத்தை எட்டினார். குறைந்த போட்டிகளில் 18 சதங்களை அடித்தவர் என்ற சாதனையும் அவர் படைத்தார்.

43 பந்துகளில் அரைச்சதம் அடித்த இப்திகார், கடைசி 10 ஓவர்களில் நேபாளத்தின் பந்துவீச்சை அதகளம் செய்தார். 49 ஆவது ஓவரில் சதத்தை எட்டிய அவர், ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்டில் அதிவேக சதம் அடித்தவர்கள் பட்டியலில் நான்காவது இடத்தையும் பிடித்தார்.

131 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகளுடன் 151 ஓட்டங்களைக் குவித்த பாபர் அசாம், கடைசி ஓவரில் சொம்பல் கமியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். கடைசிப் பத்து ஓவர்களில் பாகிஸ்தான் அணி, 129 ஓட்டங்களைக் குவித்தது. ஐந்தாவது விக்கெட்டுக்கு பாபர் - இப்திகார் இணை 214 ஓட்டங்களைச் சேர்த்து புதிய சாதனையைப் படைத்தது.



71 பந்துகளில் 11 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 109 ஓட்டங்கள் எடுத்த இப்திகார், கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். நேபாளம் அணித் தரப்பில் சோம்பல் கமி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

342 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய நேபாளம் அணி பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்களைச் சமாளிக்க முடியாமல் பரிதாபகரமாகச் சரணடைந்தது.

முதல் ஓவரிலேயே பூர்டெல், பாடெல் ஆகியோரின் விக்கெட்டுகளைக் கைப்பற்றினார் ஷகீன் ஷா அப்ரிடி. நசீம் ஷாவும் தனது முதல் ஓவரிலேயே ஆசிப் சேக்கின் விக்கெட்டைக் வீழ்த்தினார்.

ஆரிஃப் ஷேக் - சோம்பல் கமி இணை தாக்குப்பிடித்து விளையாடி 50 ரன்களை எட்டியது. 5 பவுண்டரிகள் உடன் 26 ரன்கள் எடுத்த ஆரிஃப் சேக், ஹாரிஸ் ராஃபின் ஒரு புயல்வேகப் பந்தில் ஸ்டம்புகளைப் பறிகொடுத்தார். மோசமான ஷாட் தேர்வின் காரணமாக நேபாளம் பேட்டர்கள் விக்கெட்டுகளை எளிதாகத் தூக்கிக் கொடுத்தனர். சுமாராக விளையாடி வந்த சோம்பல் கமியும் 28 ரன்களில் ஹாரிஸ் ராஃபின் பந்தில் விக்கெட் கீப்பர் ரிஸ்வானிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார்.

முதல் ஐந்து விக்கெட்டுகளை வேகப்பந்து வீச்சாளர்கள் கைப்பற்றிய நிலையில், கடைசி ஐந்து விக்கெட்டுகளை சுழற்பந்து வீச்சாளர்கள் பங்கிட்டுக்கொண்டனர். வேகத்தைக் குறைத்தும் கூட்டியும் சாதுர்யமாக பந்துவீசிய ஷதாப் கான், 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தனது ஐந்தாவது ஓவரில் குல்சான் ஜா, லமிச்சானே விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவர், ஆட்டத்தின் 24 ஆவது ஓவரில் மல்லா, ராஜ்பன்ஷி ஆகியோரின் விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டத்தை முடித்துவைத்தார்.

நேபாளம் தரப்பில் அதிகபட்சமாக, சோம்பல் கமி 28 ஓட்டங்களை எடுத்தார். இதன் மூலம் 238 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி அபார வெற்றியைப் பெற்றது. 151 ஓட்டங்களைக் குவித்த பாபர் ஆஸம் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

ஆசியக் கிண்ணத் தொடரை பிரமாண்ட வெற்றியுடன் தொடங்கியுள்ள பாகிஸ்தான் அணி, செப்டம்பர் 2 இல் இந்திய அணியை எதிர்கொள்ளவிருக்கிறது. (04)






## இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர்களுக்கு நிகராக வீராங்கனைகளுக்கும் ஊதியம் வழங்கத் தீர்மானம்

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் இங்கிலாந்து கிரிக்கெட் வீராங்கனைகளுக்கு, அந்த நாட்டு ஆண்கள் கிரிக்கெட் அணி வீரர்களுக்கு நிகராக ஊதியம் (போட்டிக் கட்டணம்) வழங்கப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து பெண்கள் அணியின் ஆட்டத்தை நேரில் காண வரும் ரசிகர்களின் எண்ணிக்கை மற்றும் நேரடி ஒளிபரப்புகளில் போட்டிகளைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து இருப்பதையடுத்து, அந்த நாட்டுக் கிரிக்கெட் சபை இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த வாரத்தில் நடைபெறவுள்ள இலங்கைக்கு எதிரான ரி-20 போட்டித் தொடரில் இருந்து இங்கிலாந்து வீராங்கனைகளுக்கான ஊதிய உயர்வு அமலுக்கு வரவிருக்கிறது.

ஏற்கனவே இந்தியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் கிரிக்கெட் வீரர்களுக்கு இணையாக வீராங்கனைகளுக்கும் போட்டிக் கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் இங்கிலாந்தும் இணைகிறது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கான போட்டிகளுக்கும் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை கடந்த ஜூலை மாதம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்த நடவடிக்கை - வியாழேந்திரன்



கிழக்கு மாகாணத்தில் தனியார் கல்வி நிலையத்தை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நீண்ட கலந்துரையாடல், கருத்துக் கணிப்பு மற்றும் முறைப்பாடுகளைப் பரிசீலித்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் கல்வி நிறுவனங்கள் வர்த்தகச் சான்றிதழ்களைப் பெற வேண்டும், ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகளை நடத்தக்கூடாது, ஏனைய நாட்களில் மாலை 6 மணிக்கு முன் நடத்த வேண்டும் போன்றவற்றை அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ,ஒரு மணி நேர வகுப்பின் அதிகபட்ச கட்டணம் உயர்தர மாணவருக்கு 70 ரூபாவாகவும் ஏனைய மாணவர்களுக்கு 50 ரூபாவாகவும் இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும், நேர அட்டவணை, வருகை குறிக்கப்படல், ஆசிரியர்களின் பெயர் பொறித்தல் வேண்டும் மற்றும் குடிநீர், சுகாதார வசதிகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை வழங்க வேண்டும் எனவும் அவர் வலியறுத்தியுள்ளார்.

பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்கள் பற்றிய தகவல்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், அரச பணியில் இருந்து விடுமுறையில் உள்ள ஆசிரியர்கள் பாடசாலை நேரங்களில் வகுப்புகள் அல்லது கருத்தரங்குகளை நடத்தக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)



## ஐ.நா புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு!

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிராஞ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி, நாட்டில் தனது பணியை ஏற்றுக்கொண்டதன் நிமித்தமே இச்சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டின் பல்வேறு சமூக பொருளாதார அரசியல் விடயங்கள் தொடர்பாக இரு தரப்புக்கும் இடையில் இதன்போது பல கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

நாட்டில் நிலவிவரும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐ.நாவின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்குத் தெரியப்படுத்தினார்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தல்களை ஒத்திவைத்து அடிப்படை உரிமைகளை மீறி வருவது தொடர்பாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சில பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (க)

# பொலிஸ் காவலில் இருந்த நபருக்கு அனுப்பி வைத்தப் உணவுப் பொதியில் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிப்பு

## கைதுக்குப் போன பொலிசாரின் கைகளில் கடி விழுந்தது

பொலிஸ் காவலில் இருந்த சந்தேக நபர் ஒருவருக்கு அவரது மனைவியால் அனுப்பப்பட்ட உணவுப் பொதியில் சூட்சமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. அதையடுத்து, அவரது மனைவியைக் கைது செய்யச் சென்ற பொலிஸார் இருவரின் கைகளைக் கடித்து விட்டு அப்பெண் தப்பிச்செல்ல முயற்சித்த சம்பவமொன்று பின்வத்த எனும் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, பொலிஸ் காவலில் உள்ள போதைப்பொருள் சந்தேக நபருக்கு நண்பர் ஒருவர் மூலமாக அவரது மனைவியால் அனுப்பப்பட்ட உணவுப் பொதியில் சந்தேகம் கொண்ட பொலிஸார் அதனை சோதித்துப் பார்த்த போது, உணவில் காணப்பட்ட பெரிய மீன் துண்டொன்றின் உள்புறமாக சூட்சமமாக ஐஸ் போதைப்பொருள் மறைத்து வைத்திருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து, பொலிஸ் காவலில் இருந்த சந்தேக நபரிடம் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், சந்தேகநபரின் மனைவியை கைது செய்வதற்காக அவரது வீட்டுக்குச் சென்ற போது, அவர் அந்த பொலிஸாரின் கைகளை கடித்துவிட்டு தப்பி ஓட முற்பட்டுள்ளார்.

கைது செய்யச் சென்ற பொலிஸாரில் ஒருவர் பெண் பொலிஸ் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின போது சந்தேகநபரிடம் மேலும் ஐந்து ஐஸ் போதைப் பொருள் பொதிகளை பொலிஸார் கண்டுபிடித்தனர். (ரெ-03)

## பாடசாலை நேரத்தை 4 மணி வரை நீடிக்க அமைச்சருக்கு யோசனை!

இலங்கைப் பாடசாலைகளின் நேரத்தை காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நீடிப்பதற்கு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் யோசனையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

காலிப் பகுதியில் கரையோரங்களைச் சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தின் பின்னர் ஊடங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்த விடயத்தை வெளியிட்டார்.

பாடசாலை மாணவர்களை விளையாட்டில் ஈடுபட ஊக்குவிக்கும் நோக்கில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (க)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி .08.2023இல் வெளியிடப்பெற்றது.